ISSN: 2582-5518



புதுகை **வரலாறு** நாளிதழ்

Follow Us: PUDUGAI VARALARU




வெள்ளி ❖ ஜூலை 25, 2025 | சென்னை & புதுக்கோட்டை | 7 பக்கம் ❖ வரலாறு 10 ❖ இதழ் 205

# வெங்கல் பகுதியில் இயங்கி வரும் அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தில் பி.டெக் முதலம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது




ஊத்துக்கோட்டை, ஜூலை25-

சென்னைக்கு அருகே வெங்கல் பகுதியில் அம்ருதா விஸ்வ வித்யா பீடம் என்று அழைக்கப்படும் கல்லூரி இயங்கி வருகிறது. கல்லூரி வளாகத்தில் 7-வது பேட்ச் பி.டெக் வகுப்புகள் 2025 29-ம் கல்வி ஆண்டின் வகுப்புகள் துவங்கியது. இதில்,முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இம்மாணவர்களுக்கு ஆறு நாள் ஓரியன்டேஷன் நிகழ்ச்சி 23-ந் தேதி முதல் 28-ந் தேதி வரையில் நடைபெறுகிறது. முதல் நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஏர்செலின் நிறுவனர் மற்றும் ஏஐடபிள்யுஓ-யின் வழிகாட்டுநர் சி.சிவசங்கரன், "ஒவ்வொரு வெற்றியும் முயற்சியில் தொடங்குகிறது" என்று மாணவர்களை ஊக்குவித்து, அவர்களது படிப்பு மற்றும் வாழ்க்கையைத் வடிவமைக்க முதல் படிகளை கவனத்துடன் எடுத்து வையுங்கள் என்று உத்வேகம் அளிக்குமாறு சிறப்புரையாற்றி பேசினார்.

அம்ருதா பொறியியல் மற்றும் கணினி பள்ளியின் முதல்வர் டாக்டர் வி.ஜெயகுமார் திறமையான பொறியாளர்களை உருவாக்குவதே பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கம் என்பதை எடுத்துக்கூறி அனைவரையும் வரவேற்றார். நிர்வாக இயக்குநர் ஸம்பூஜ்ய ஸ்வாமி வினயாம்ருதானந்தபுரி தொழில்நுட்ப திறன்களை கருணையுடன் கூடிய சமூக பொறுப்புடன் பயன்படுத்துமாறு அனைவருக்கும் நினைவூட்டினார். முதல்வர் டாக்டர் சசாங்கன் ராமநாதன் அம்ருதாவின் கண்ணோட்டம், முக்கியமான சாதனைகள் மற்றும் வளாகத்தை முன்னோக்கி நடத்தும் புதுமைப் பண்பு குறித்து உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து வளாக செய்திமடலான விருத்தியின் முதல் இதழ் வெளியிடப்பட்டது. இதில்,சமீபத்திய ஆராய்ச்சி, மாணவர் திட்டங்கள் மற்றும் வரவிருக்கும் நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. வழிகாட்டுதல் திட்டம் ஜூலை 28 வரை நடைபெறுகிறது, இதில் கல்வி உரைகள், சக மாணவர்களுடனான வழிகாட்டுதல் அமர்வுகள் மற்றும் பயிற்சி மையங்கள் அடங்கும்.இந்நிகழ்ச்சிகள் மாணவர்கள் வளாகத்தில் இணைந்து கொள்ளவும், கலாச்சாரத்தை அறிந்து கொள்ளவும், அவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான தெளிவான படிகளைத் திட்டமிட உதவும் வகையில் நடைபெறுகிறது.